CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# இலங்கை இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை தொடர்பான கரிசனங்களும் அவசர மறுசீரமைப்புக்கான தேவையும்

***ஆகஸ்ட் 19, 2019, கொழும்பு, இலங்கை:***

*இலங்கை இராணுவத்தின் தளபதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமனம் செய்யப்பட்டதையிட்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) ஆழ்ந்த கரிசனம் கொண்டுள்ளதுடன் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள கடுமையான குற்றச்சாட்டுகளின் பின்னணியில் இந்த நியமனத்தை மீளாய்வு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலங்கை அரசாங்கத்தை அது வலியுறுத்துகிறது.*

*இந்த வருடத்தின் ஜனவரியில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இலங்கை இராணுவத்தின் அலுவலகப் பிரதானியாக நியமிக்கப்பட்ட போதும் மா.கொ.நி இதே போன்ற கரிசனங்களை எழுப்பியிருந்தது. பாதுகாப்புத் துறை மறுசீரமைப்புகள் மற்றும் பொறுப்புக் கூறலுக்கு தான் பற்றுறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கும் தற்போதைய அரசாங்கம் இக்கரிசனங்களில் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை குறித்து நாங்கள் ஏமாற்றமடைகிறோம். இன்றைய நியமனம் வாக்குறுதியளிக்கப்பட்ட மறுசீரமைப்புகளின் ஒரு மறுத்தலுக்கான ஒரு முயற்சியாகும். இது, மனித உரிமை மாண்புகளுக்கான ஒரு தெளிவான உதாசீனப்படுத்துதலை எடுத்துக் காட்டுவதுடன், இலங்கையில் குற்றவிலக்களிப்பை மேலும் பற்றிப்பிடித்திருப்பதற்கு வசதி அளிக்கிறது.*

*மேஜர் ஜெனரல் சில்வா, போரின் இறுதிக் கட்டங்களின் போது இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்தவராவர். சர்வதேச மனிதாபிமானச் சட்டம் (IHL) மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் (IHRL) என்பவற்றின் மீறுதல்களில் அவருக்கு எதிராக பல பொது ஆவணங்கள் குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:*

- *2011இல், ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழு (POE) தங்களது அறிக்கையில், போரின்போது புரியப்பட்ட மீறுதல்கள் தொடர்பான மேலும் சுயாதீன விசாரணைகளுக்கு ஒரு பரிந்துரையுடன் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை பெயரிட்டது.*

- *2012இல், மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் ஐக்கிய நாட்கள் மனித உரிமைகள் பேரவையில் (UNHRC) "குறைந்தபட்சம் திரு. சவேந்திர சில்வாவினால் மறுமொழியளிக்கப்படுவதற்கு சர்வதேச குற்ற வழக்கொன்றில் அவரது பிரசன்னத்தின் தேவை" பற்றி அறிவித்தார்.*

- *மீண்டும் 2012இல், போரின் இறுதிக் கட்டத்தின் போது அவரின் நடத்தைகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் காரணமாக அமைதி காக்கும் நடவடிக்கைகள் தொடர்பான ஐ.நா. விசேட ஆலோசனைக் குழுவிலிருந்து மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நீக்கப்பட்டார்.*

- *2015இல், இலங்கை மீதான மனித உரிமைகள் விசாரணைக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் 58ஆவது பிரிவுடன் தொடர்புபட்ட போர் குற்றங்களாக கருதும் பல மீறல்களை ஆவணப்படுத்தியது. இவை கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் மற்றும் ஏனைய இடங்களில் பொதுமக்கள் இறப்புகள் பொதுமக்களின் உடமைகளுக்கு அதிக சேதத்தை விளைவித்த வேண்டுமென்றே மற்றும் கண்மூடித்தனமான தாக்குதல்களையும் உள்ளடக்குகின்றன. வைத்திய சாலைகள், யுத்த சூனிய வலயங்கள், ஐ.நா. தளங்கள் மற்றும் சிவிலியன்களை, விசேடமாக பெண்கள், சிறுவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களைக் கொண்டிருந்த ஏனைய இடங்கள் மீதான தாக்குதல்களை சாட்சிகள் காண்பிக்கின்றன. இலங்கை மீதான மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலக விசாரணை அறிக்கையும் (OISL) மிகுந்த சர்ச்சைக்குரிய 'வெள்ளைக் கொடி' விவகாரம் உட்பட சரணடைந்தவர்களின் பிரச்சினையை ஆராய்கிறது.*

- *அத்துடன் 2015இல், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு, 'வெள்ளைக் கொடி' விவகாரத்தில் சரணடைந்தவர்கள் மற்றும் ஏனைய சம்பவங்களைக் குறிப்பிட்டு சுயாதீனமான விசாரணைகளைத் தேவைப்படுத்தும் யுத்தக் குற்றங்களுக்கு நம்பகமான குற்றச்சாட்டுகளை உள்ளடக்கியுள்ளது.*

- *மார்ச் 2019இல், மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் கட்டளையின் கீழுள்ள இராணுவத்தினரின் உரிமை மீறல்களுக்கான குற்றச்சாட்டுகள் ஆவணப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக, இலங்கை இராணுவத்தின் அலுவலகப் பிரதானியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமனம் செய்யப்பட்டமை தொடர்பாக கரிசனங்களை எழுப்பினார்.*

*மேலுள்ளவை மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிராக சுமத்தப்பட்ட தீவிரமான குற்றச்சாட்டுகளின் ஒரு வெளிப் பார்வை மட்டுமேயாகும். அவை பாரதூர தன்மையானவையாக இருந்த போதிலும், இந்தக் குற்றச்சாட்டுகள் முன்னைய அரசாங்கத்தினாலோ அல்லது தற்போதைய அரசாங்கத்தினாலோ முறையான வகையில்*

விசாரிக்கப்படவில்லை. உண்மையில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் தொடர்ச்சியான பதவியுயர்வுகள் எவ்வாறு இந்தக் குற்றம் சுமத்தப்பட்ட மீறல்கள் வெகுமதியளிக்கப்பட்டவையாக தோற்றமளிக்கின்றன என்பதையே காண்பிக்கின்றன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 30/1 இன் ஒரு பகுதியாக, பாதுகாப்புத் துறை மறுசீரமைப்புகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் சொந்தப் பற்றுறுதிகளின் பின்னணிக்கு எதிராகவும் இது உள்ளது.

போர் முடிவடைந்ததிலிருந்து ஒரு தசாப்தத்தின் பின், ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கை முகம்கொடுக்கின்ற புதிய பாதுகாப்புச் சவால்களைக் கவனத்தில் கொள்ளும்போது இந்த விடயங்கள் மேலும் மோசமடைகின்றன. ஏப்ரல் 21, 2019 இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களை ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக் குழு முன் நடைபெறுகின்ற நடவடிக்கைகள், பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையில் அவசரமான மறுசீரமைப்புக்கான தேவையை எடுத்துக்காட்டுவதை மா.கொ.நி. கவனத்தில் கொள்கிறது. கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுக்கும் வேளையில், இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட மிகவுயர்ந்த பதவிக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை, அவசியமான மறுசீரமைப்பு மற்றும் குற்றவிலக்களிப்புக்கு கவனம் கொள்ளுதல் என்பவற்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தின் பற்றுறுதியின் உண்மைத்தன்மையில் மக்கள் நம்பிக்கை வைப்பதென்பதை சந்தேகத்திற்குரியதாக்குகிறது.

இத்தகையதொரு சூழ்நிலையில், தற்போதைய நியமனத்தை மீளாய்வதற்கு அரசாங்கத்தை வலியுறுத்தும் வேளையில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் இலங்கை இராணுவத்தின் பணிகளைக் கண்காணிப்பதற்கு ஒரு மேலும் வலுவான வகிபாகத்தை எடுப்பதற்கும் மற்றும் மனித உரிமை மீறல்கள் உதாசீனப்படுத்தப்பட்டு மற்றும் குற்றவிலக்களிப்பு செழித்தோங்குகின்ற ஒரு தேசம் நோக்கியதாக இலங்கை மேலும் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகிறது.